# தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் (ஐ.இ)

**Tamil Catholic Association (UK) Po Box. 1073 Wembley HA0 9JD**

**Reg Charity No: 1124627 tcauk@hotmail.co.uk**

**Dear Members/ Friends / Well-wishers**

தமிழ் கத்தோலிக்க ஒன்றியம் UK தனது **29வது** வருடாந்த இராப்போசன ஒன்று கூடலை எதிர்வரும் ஐப்பசி மாதம் **22ம்திகதி** சனிக்கிழமை **மாலை 6.00** மணிக்கு **Greenford Hall, Greenford Broadway, Ruislip Road, Greenford, Middlesex UB6 9QN** என்ற முகவரியில் கொண்டாடவுள்ளது. இம்முறை விழாவுக்கு தலைமை தாங்கி சிறப்பிக்க **அருட்தந்தை T.E. தேவராஜன் அடிகளார்** (முன்னாள் தமிழ் கத்தோலிக்க ஆன்மீக பணியக இயக்குனர் UK) வருகை தர இருக்கிறார்.

ஒன்றியம் தாயக மண்ணில் ஆதரவற்ற சிறுவர்களை பராமரிக்கும் பணியை பொறுப்பேற்று இவ் வருடத்துடன் **(2005-2016) 11** ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த 11ஆண்டு காலத்தில் சுமார் **104** ஆதரவற்ற சிறுவர்கள் தங்களுக்கு தேவையான அடிப்படை கல்வி வசதிகள், உணவு, உடை, மற்றும் தங்குமிட வசதிகளை இலவசமாக பெற்று மகிழ்வுடன் வாழ்ந்து வருகிறார்கள். இதைவிட போரினால் அங்கவீனர்களாக்கப்பட்ட சிறுவர்கள், மற்றும் இயற்கையாகவே வலுவிழந்தவர்கள் என 65க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வுப் பயிற்சி மன்னாரிலும், மட்டக்களப்பிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பாரிய பணியை தாயக மண்ணில் செய்வதற்கு தேவையான நிதியை நன்கொடையாக ஒன்றியம் வருடந்தோறும் வழங்கி வருகின்றது. இந்த 11 வருடங்களில் மொத்த நன்கொடையாக சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பவுண்களை **(£1,38,200-00)** யாழ், மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் இயங்கி வரும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கும், ஏனைய மனிதாபமான பணிகளுக்குமாக அனுப்பியுள்ளது என்பதனை மிக்க மகிழ்வுடன் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

இந்த அளப்பரிய சேவையை செய்வதற்கு இறைவன் எமக்கு அருளிய ஆசீருக்கும், உங்கள் ஆதரவுக்கும் நன்றி செலுத்த நாம் அருட்தந்தையின் தலைமையில் ஒன்று கூட தயாராகின்றோம். எனவே நீங்களும் உங்கள் குடும்பத்தினரோடு இணைந்து இவ்விழாவினை சிறப்பிக்க முன் வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இம்முறையும் விழாவில் வழமைபோல் கலைநிகழ்வுகள், சிறுவர் நடனங்கள், இசை, பாட்டு, அதிஸ்டலாபச் சீட்டிழுப்பு, **American Auction**, இறுதியில் அனைவருக்குமான நடனமும்**(Dance)** இடம்பெறும். இன்நிகழ்வின் மூலம் சேகரிக்கப்படும் நிதி போரினால் பாதிக்கப்பட்டு ஆதரவற்ற சிறுவர்களை பராமரிக்கும் இல்லங்களுக்கும், மற்றும் விசேட பராமரிப்புக்குரிய பிள்ளைகளின் இல்லங்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

நுழைவுச்சீட்டுக்களுக்கும், மேலதிக விபரங்களுக்கும் கீழ்கண்ட நிர்வாககுழு அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ளவும். **நுளைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில் விற்பனை செய்யப்படமாட்டாது.**

| | | | |
|---|---|---|---|
| **Mr. றம்பாலா பிரான்சீஸ்** | 07432 123 966 | **Mrs. சிரோமி ரவீந்திரன்** | 07443 932 609 |
| **Mr கஷயன் பயஸ்** | 0203 556 4017 | **Mrs. மேரி புஸ்பராஜா** | 07944 348 845 |
| **Mr நிக்கிலஸ் ஜோதிராஜன்** | 0208 423 0282 | **Mr. ஜீவறாஜ் யோசவ்** | 07930 489 660 |
| **Mr. வின்சன் ஞானப்பிரகாசம்** | 07813 190 591 | **Mrs. றஞ்சினி பீற்றர்பிள்ளை** | 0208 426 6109 |
| **Mrs: சாந்தி மகேந்திரன்** | 0208 904 0029 | | |

**Tickets : Adults £ 15.00 Family (4) £35.00**

மேலதிக விபரங்களை எமது இணையதளத்திலும் (www.tca-uk.org ) பார்வையிடலாம்.

நன்றி!

ஒன்றிய நிர்வாகக் குழு

03.07.2016